பிரஸார்பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை

20 06 2024 **THURSDAY** **6.30 PM**

மாநில செய்திகள்

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. தமிழகத்தில் கள்ளச்சாராயத்தை ஒழிக்க முதலமைச்சர் உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை என்று மத்திய இணையமைச்சர் திரு எல். முருகன் குற்றம் சாட்டியுள்ளார்.
2. கள்ளக்குறிச்சி கள்ளச்சாராய சம்பவம் குறித்து சிபிஐ விசாரணைக்கு உத்தரவிட வேண்டும் என்று அஇஅதிமுக-வும், பிஜேபி-யும் வலியுறுத்தியுள்ளன.
3. ஜவுளித்துறையின் வளர்ச்சிக்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என்று மத்திய அரசு கூறியுள்ளது.
4. மேற்குதொடர்ச்சி மலை மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.
5. ஆசிய இளையோர் செஸ் சாம்பியன் போட்டியில் இந்தியா ஒரு தங்கம் உள்பட எட்டு பதக்கங்களை வென்றது.

<u>இனி விரிவான செய்திகள் -</u>

<<<<<>>>>>

தமிழகத்தில் கள்ளச்சாராயத்தை ஒழிக்க முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை என்று மத்திய இணையமைச்சர் திரு எல். முருகன் குற்றம் சாட்டியுள்ளார்.

செய்தி நிறுவனத்துக்கு அளித்துள்ள பேட்டியில் இதனை தெரிவித்துள்ள அவர், கள்ளக்குறிச்சி சம்பவத்தில் கள்ளச்சாராயம் அருந்தி 35-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்திருப்பது தமக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியிருப்பதாக தெரிவித்தார்.

70-க்கும் மேற்பட்டோர் சிகிச்சையில் இருப்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

கடந்தாண்டு மரக்காணத்தில் கள்ளச்சாராயம் அருந்தி உயிரிழப்பு ஏற்பட்டதையும், இதுபோன்ற உயிரிழப்புகளை தடுக்க திமுக அரசு உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை என்றும் அவர் குறை கூறினார்.

இந்த சம்பவத்திற்கு முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் பொறுப்பேற்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த சம்பவத்துக்கு பொறுப்பேற்று அமைச்சர் திரு முத்துசாமி ராஜினாமா செய்ய வேண்டும் என்றும் திரு எல். முருகன் வலியுறுத்தினார்.

அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமியும் கள்ளச்சாராய சம்பவத்திற்கு பொறுப்பேற்று முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் ராஜினாமா செய்ய வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

கள்ளக்குறிச்சியில் இந்த சம்பவத்தால் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருபவர்களை சந்தித்த பின் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

மாநிலத்தில் போதைப்பொருட்களின் பயன்பாடு அதிகரித்துள்ளதாகவும், திரு எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டினார்.

பிஜேபி மாநிலத்தலைவர் திரு அண்ணாமலையும் பாதிக்கப்பட்டவர்களை நேரில் சந்தித்து ஆறுதல் தெரிவித்தபின் செய்தியாளர்களிடம் பேசினார்.

இந்த சம்பவம் குறித்து சிபிஐ விசாரணைக்கு உத்தரவிட வேண்டும் என்று வலியுறுத்தி, உள்துறை அமைச்சருக்கு கடிதம் எழுத உள்ளதாக அவர் கூறினார்.

கள்ளச்சாராய விற்பனையில் ஈடுபடுவோருக்கும், திமுக-வுக்கும் தொடர்பு உள்ளதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

சம்பந்தப்பட்ட பகுதியை சேர்ந்தவர்கள் கடந்த மூன்று நாட்களாக கள்ளச்சாராயத்தை குடித்து வந்ததாக அவர் தெரிவித்தார்.

தமிழகத்தில் கடந்த இரண்டாண்டுகளில் 60-க்கும் மேற்பட்டோர் கள்ளச்சாராயத்தினால் உயிரிழந்ததாக அவர் கூறினார்.

இதன் பின்னரும் முதலமைச்சர் பதவியை தொடர தார்மீக உரிமை உள்ளதா என்பதை திரு மு.க.ஸ்டாலின் எண்ணிப்பார்க்க வேண்டும் என்றும் திரு அண்ணாமலை தெரிவித்தார்.

எதிர்காலத்தில் இதுபோன்ற சம்பவங்கள் நடைபெறாமல் இருப்பதை மாநில அரசு உறுதி செய்ய வேண்டும் என்று தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித்தலைவர் திரு செல்வப்பெருந்தகை சென்னையில் செய்தியாளர்களிடம் பேசுகையில் தெரிவித்தார்.

இந்த சம்பவத்தில் உயிரிழந்தவர்களுக்கு நிதியுதவி வழங்குவது தவறான முன்னுதாரணமாகிவிடும் என்று தேமுதிக பொதுச்செயலாளர் திருமதி பிரேமலதா விஜயகாந்த் கூறியுள்ளார்.

இன்று கள்ளக்குறிச்சியில் பாதிக்கப்பட்டவர்களை சந்தித்து ஆறுதல் தெரிவித்தபின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், கள்ளச்சாராயத்தை கட்டுப்படுத்துவதில் அரசு நிர்வாகம் தோல்வியடைந்துவிட்டதாக தெரிவித்தார்.

கள்ளக்குறிச்சி சம்பவம், மாநில அரசும், காவல்துறையும் முற்றிலுமாக தோல்வியடைந்துவிட்டதை உணர்த்துவதாக பாமக தலைவர் திரு அன்புமணி ராமதாஸ் கூறியுள்ளார்.

இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் இதனை தெரிவித்துள்ள அவர், கள்ளச்சாராயத்தில் தொடர்புடையோருக்கும், திமுக நிர்வாகிக்கும் இடையே உள்ள தொடர்பு குறித்து விசாரணை நடத்த வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

இதற்கிடையே, மாநில அமைச்சர் திரு உதயநிதி ஸ்டாலின் இன்று கள்ளக்குறிச்சி சென்று உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு மாநில அரசு அறிவித்த பத்து லட்சம் ரூபாய் நிதியுதவியை வழங்கினார்.

மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களையும் சந்தித்து திரு உதயநிதி ஸ்டாலின் ஆறுதல் தெரிவித்தார்.

<<<<<>>>>>>

ஜவுளித்துறையின் வளர்ச்சிக்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என்று அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு கிரிராஜ் சிங் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் ஜவுளி தொழில்துறை பிரதிநிதிகளுடன் கலந்துரையாடுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

ஜவுளித்துறையினர் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண்பதற்கான அனைத்து உதவிகளையும் மத்திய அரசு வழங்கும் என்றும் திரு கிரிராஜ் சிங் தெரிவித்தார்.

<<<<<>>>>>>

சர்வதேச யோகா தினம் நாளை கொண்டாடப்படுவதையொட்டி, நாடு முழுவதும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

கல்லூரிகளில் நடைபெற்றுவரும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளில் மாணவர்கள் ஆர்வத்துடன் பங்கேற்று வருகின்றனர்.

யோகா நமக்கான பெருமை, சிறந்த வாழ்வியலுக்கான நடைமுறை என்று சென்னையை சேர்ந்த வினோத் வரதராஜன் எமது செய்தியாளரிடடம் தெரிவித்தார்.

<u>(சவுண்ட் பைட் - வினோத் வரதராஜன் - 40 செகண்ட்ஸ்)</u>

<<<<<>>>>>>

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த ஐந்து தினங்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் இதனை தெரிவித்த அவர், சில பகுதிகளில் கனமழை பெய்யக்கூடும் என்றார்.

<u>(சவுண்ட் பைட் - செந்தாமரை கண்ணன் - 59 செகண்ட்ஸ்)</u>

<<<<>>>>>>

<u>மாவட்டச் செய்திகள்</u>

செங்கல்பட்டு மாவட்டம் பரனூர் மறுவாழ்வு இல்லத்தில் ஆட்சியர் திரு அருண்ராஜ் இன்று ஆய்வு மேற்கொண்டார்.

----------------------

தருமபுரி மாவட்டம் அரூரில் காலை உணவுத்திட்டம் குறித்து ஆட்சியர் திருமதி சாந்தி இன்று ஆய்வு மேற்கொண்டார்.

----------------

நாமக்கல் மாவட்டத்தில் திருநங்கைகளுக்கான சிறப்பு முகாம் நாளை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

--------------------

திருவாரூர் மாவட்டம் மன்னார்குடியில் உள்ள அரசு கலைக்கல்லூரியில் மாணவர்களுக்கான யோகா கருத்தரங்கம் மற்றும் யோகா பயிற்சி வகுப்புகள் இன்று நடத்தப்பட்டன.

--------------------

தேனி மாவட்டம் மஞ்சளாறு அணையின் நீர்மட்டம் அதன் முழு கொள்ளளவான 55 அடியை எட்டியுள்ளது. இதன்காரணமாக, தேனி, திண்டுக்கல் மாவட்டங்களின் கரையோரப்பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு மூன்றாவது மற்றும் இறுதிக்கட்ட வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

-----------------

நாகை மாவட்டத்தில் ஆயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்த நாகூர் நாகநாதர் கோவில் தேரோட்டம் இன்று நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் இதில் பங்கேற்றனர்.

**<<<<>>>>>>**

<u>விளையாட்டுச் செய்திகள்</u>

ஆசிய இளையோர் செஸ் சாம்பியன் போட்டியில் இந்தியா ஒரு தங்கம் உட்பட எட்டு பதக்கங்களை வென்றது.

கஸகஸ்தானின் **Almaty-**யில் நடைபெற்ற இப்போட்டியில், எட்டு வயதுக்கு உட்பட்டோருக்கான மகளிர் பிரிவில் **Narayani Umesh Marathe** தங்கப்பதக்கத்தையும், நக்ஷத்ரா வெண்கலப்பதக்கத்தையும் வென்றனர்.

12 வயதுக்கு உட்பட்டோருக்கான மகளிர் பிரிவில் **Pratitee Bordoloi** வெள்ளிப்பதக்கம் வென்றார்.

மற்றொரு பிரிவில் **Sarbartho Mani** வெள்ளிப்பதக்கம் வென்றார்.

10 வயதுக்கு உட்பட்டோருக்கான மகளிர் பிரிவில் **Aaradhya Das** வெண்கலப்பதக்கம் வென்றார்.

12 வயதுக்கு உட்பட்டோருக்கான பிரிவில் **Siddhanth Poonja** வெண்கலப்பதக்கம் வென்றார்.

16 வயதுக்கு உட்பட்டோருக்கான பிரிவில் வேலவா ராகவேசும், 18 வயதுக்கு உட்பட்டோருக்கான பிரிவில் **Harsh Suresh** –ம் வெண்கலப்பதக்கம் வென்றனர்.

------------------

செக் சர்வதேச பாரா தடகள சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Pranav Soorma** தங்கப்பதக்கம் வென்றார்.

ஆடவர் **Club Throw** பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

------------------

உலகக்கோப்பை டுவென்டி – டுவென்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா இன்று ஆப்கானிஸ்தானை எதிர்கொள்கிறது.

**Bridgedown**-ல் நடைபெறவுள்ள இப்போட்டி இரவு எட்டு மணிக்கு தொடங்குகிறது.

--------------

**Kaohsiung** மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் லோகேஷ் ரெட்டி காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.
இன்று நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், 23-21, 21-10 என்ற செட் கணக்கில், ஆஸ்திரேலியாவின் **Jack Yu**-வை வென்றார்.

----------------

லாகோஸில் நடைபெற்றுவரும் சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில், **Manav Thakkar – Archana Kamath** இணையும், **Harmeet Desai - Yashaswini Ghorpade** இணையும், **Manush Sha – Diya Chitale** இணையும் காலிறுதிக்கு முன்னேறியுள்ளன.

-----------

பிரிக்ஸ் விளையாட்டுப்போட்டிகளில் இந்தியா இன்று, இரண்டு வெண்கலப்பதக்கங்களை வென்றது.

**<<<<END>>>>>>**